# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் *சர்வீஸ் ப்ராம்ப்ட்டன்* பாப்-அப் சேவை கவுன்ட்டர்களை திறக்கவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 27, 2021) – செப்டம்பர் 1, 2021 தேதியன்று துவங்கி, சூஸன் ஃபென்னெல் ஸ்போர்ட்ஸ்ப்ளேக்ஸ், கேஸ்ஸீ கேம்ப்பெல் சமுதாயக் கூடம் மற்றும் கோர் மெடோஸ் சமுதாயக் கூடம் ஆகியவற்றில் மக்கள் நேரில் வந்து சேவை பெறுவதற்கான சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் பாப்-அப் கவுன்ட்டர்கள் தற்காலிகமாக திறக்கப்படும்; இது ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கு தகவல்களைப் பெறுவதற்கான எளிதான அணுகல் வழங்கும். இதற்கு, முன்பதிவு செய்வது அவசியம் மற்றும் www.brampton.ca/SkipTheLine இல் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

நகரத்தில் அங்கங்கு இருக்கின்ற சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் கவுன்ட்டர்களுக்கு நகரவாசிகள் தங்கள் வசதிக்கேற்ப வருகை தரலாம், மற்றும் தங்களுக்கு வேண்டிய சேவைகளைக் கோரி நிறைவேற்றிக்கொள்ளலாம்; இதில் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு பதிவு செய்தல், வாகன நிறுத்தச் சீட்டுக்கு பணம் செலுத்துதல், மற்றும் வரித்தொகையை ரொக்கம் அல்லாத முறையில் செலுத்துதல் போன்ற வெவ்வேறு பரிவர்த்தனைகள் அடங்கும். இந்த அனைத்து இடங்களிலும் கிரெடிட் கார்ட், டெபிட் கார்டு மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

புதிய சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் கவுன்ட்டர்களின் விரிவாக்கமானது 2022 ஆம் ஆண்டு இறுதி வரை இருந்துவரும். அதனைத் தொடர்ந்து, இந்த விரிவாக்கம் செய்த சேவை அமைவிடங்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக அலுவலர்கள் பரிசீலனை செய்வார்கள்.

சர்வீஸ் ப்ராம்ப்ட்டன் கவுன்ட்டர்களை அடைவதற்காக, மக்கள் வசதிக்கேற்ற கீழ்க்காணும் நான்கு வழிகள் உள்ளன; இவை வாரத்தின் 7 நாட்களும் ஒரு நாளின் 24 மணி நேரமும் கிடைக்கும்:

- ஆன்லைனில் வருகை தரவேண்டிய தளம்: 311Brampton.ca
- 311 Brampton செயலியை App Store அல்லது Google Play யில் தரவிறக்கம் செய்யலாம்
- ப்ராம்ப்ட்டன் நகர எல்லைகளுக்கு உள்ளிருந்தபடி 311 என்றஎண்ணை அழைக்கலாம் (நகர எல்லைக்கு வெளியிலாக என்றால் :905.874.2000)
- 311@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யலாம்

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca